முருகப்பெருமான் துணை

**மகான் திருநீலகண்ட நாயனார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**03.08.2022**, புதன்கிழமை

1. ஆறுமுகப் பெருமான் அவதார
அண்ணலே ஞான வள்ளலே
ஆறுமுக அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் சுபகிருது நள்ளி திங்கள்
2. திங்களிலே மூவாறுதிகதி புந்திவாரம்
(சுபகிருது வருடம் ஆடி மாதம் 18 நாள், 03.08.2022 புதன்கிழமை)
தேசிகனுக்கு அருளாசி தன்னை
இங்கனமே திருநீலகண்ட நாயனாரும்
இயம்பிடுவேன் உலகோர் நலம்பெற
3. நலம்தரும் அரங்கன் திருவடி
ஞானம் தரும் உயர் அடியாகும்
சலனம் கொள்ளா வணங்கிவர
சரணடைந்து தொண்டு செய்ய
4. செய்யவே இயல்புநிலை மாறி
செப்பிடுவேன் வரும் அன்பர்கட்கு
மெய் ஞான நிலை மேலோங்கி
மொழிகுவேன் ஞானிகள் ஆசிபட
5. ஆசிபட உலகமக்கள் அனைவருக்கும்
ஆறுமுகனார் அருட்தயவு கிட்டும்
வாசிவென்ற ஞானிகள் பலமும்
வரமாக வந்தடையக் கூடும்
6. கூடவே கலியின் கட்டம் வந்தாலும்
குருவருளால் வெல்ல நேரும்
நாடெங்கும் ஞானிகள் பூசை
ஞான பூசையாக நடக்க மாற்றம் காணும்
7. காணவே அரங்கன் பிரணவக் குடில்
கலியுகத்தின் ஞான சபையாகும்
ஞானவான்களை படைக்க உண்டான
ஞானிகள் துணை கொண்ட சபையாகும்
8. ஆகவே பிரணவக்குடிலை நோக்கி
அகில மக்கள் அனைத்து பேரும்
வகைபட அனுகி வந்துமே
வரம்தரும் அரங்கன்பால் தீட்சை
9. தீட்சைதனை ஏற்று நன்கு
தெரிவிக்க தொண்டர்களாகி
தீட்சை வழி சுத்த சைவ நெறி
தொடர்ந்து வந்து கடைபிடித்து வர

10. வருகவே கலியிடர்கள் எல்லாம்
வகையறியா விலகி ஓடுவதுடன்
தருமபலம் தானபலம் எங்கும் பெருகி
தவராஜன் தேர்வு செய்யும் ஞானிகளாக

11. ஆகவே உலகோர் மாற்றம்
அடைவர் ஞானிகள் ஆசிபட
வகைபட அழியாமை சக்திகளாக
வழங்கிய அருளாசி முற்றே

–சுபம்–